மாகாண பொது நிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி,
வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சு
வட மாகாணம்

පළාත් රාජ්‍ය පරිපාලන, පළාත් පාලන, සමුපකාර, ග්‍රාම සංවර්ධන, මාර්ග
සංවර්ධන හා කර්මාන්ත අමාත්‍යාංශය, උතුරු පළාත

MINISTRY OF PROVINCIAL PUBLIC ADMINISTRATION, LOCAL GOVERNMENT,
CO-OPERATIVE, RURAL DEVELOPMENT, ROAD DEVELOPMENT & INDUSTRIES
NORTHERN PROVINCE

(10)

தொடர் இல:
ගොනු අංකය
Ref No:

எனது இல:
මගේ අංකය
My No: NP/02/18/GN/01

26.11.2007

PPA Circular No NP/02/2007(5)

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**<u>பெயர்வழிக்கோவை பேணலும் வரலாற்றுத்தாள் பூரணப்படுத்தலும்</u>**

மேற்படி விடயம் சம்பந்தமாக வ.கி.மா பொது நிர்வாக அமைச்சு செயலாளரால் தங்களுக்கு கடந்த காலங்களில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவ்விடயங்கள் வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பெயர் வழிக்கோவை, வரலாற்றுத்தாள் என்பன பூரணப்படுத்தப்படாமையால் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் பெறும் சந்தர்ப்பங்களில் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டி உள்ளதுடன் ஓய்வூதியம் பெறுவதிலும் தேவையற்ற காலதாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் மீள ஒரு தடவை அதே விடயங்கள் தங்களின் தனிப்பட்ட கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

(1) 14/2005 இலக்க 18.08. 2005 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பெயர் வழிக்கோவையில் சகல விபரங்களும் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(2) அத்துடன் ஒவ்வொரு உத்தியோகத்தரதும் வரலாற்றுத்தாள் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட பொதுப் படிவங்களுக்கிணங்க முதல் நியமனத் திகதி தொடக்கம் தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

மேற் குறிப்பிட்ட இரு விடயங்களும் 31.12.2007ம் திகதிக்கு முன்னர் தங்கள் தங்கள் அலுவலக ஊழியர்கள் சகலரது பெயர்வழிக் கோவைகளிலும் பூரணப்படுத்தப்பட்டதை திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்தி இவ் அமைச்சிற்கு15.01.2008க்கு முன்னர் அறிவித்தல் வேண்டும். தங்கள் அலுவலகத்தின் கீழ் உள்ள உபஅலுவலகங்களிலும் இது நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதிசெய்து கொள்ளவும்.

அடுத்து வரும் வருடங்களில் வேதன ஏற்ற விபரம் ,வினைத்திறமைகாண் தடைதாண்டல், இடமாற்றம் போன்ற விடயங்கள் தொடர்ச்சியாக வரலாற்றுத்தாளில் பதியப்படுவதை ஒவ்வொரு வருடமும் சம்பந்தப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்/திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தி ஒப்பம் இடுதல் வேண்டும். இவ் விடயங்களில் தங்கள் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றது.

*தி.இராசநாயகம்*
செயலாளர்.

பிரதி:- பிரதம செயலாளர், வட மாகாணம். – தகவலுக்காக

கன்னியா வீதி,
வரோதயநகர்,திருகோணமலை, இலங்கை.
Gen Office : 060 2266502
Fax :

කන්නියා පාර, වරෝතයනගර්,
ත්‍රිකුණාමලය, ශ්‍රී ලංකාව.
Secretary : 060 2263850

Kanniya Road, Varothayanagar,
Trincomalee. Sri Lanka.
Accountant: